முருகப்பெருமான் துணை

**மகான் வாயிலார் நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.01.2022, வெள்ளிக்கிழமை

1. கருணை வடிவான தவசியே
   கலித்துன்பம் போக்க வந்த நல்
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   அகிலமதில் உன்பெருமை கூறி
2. கூறியே பிலவ கலை திங்கள்
   குறைவிலா ஏக திகதி புகர்வாரம்
   (பிலவ வருடம் தை மாதம் முதல் நாள், 14.01.2022 வெள்ளிக்கிழமை)
   தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
   தேசிகனுக்கு வாயிலார் நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உயர்வாக ஞான பலம் தந்தருளும்
   ஞானதேசிகன் வழிகள் தன்னை
   நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருகவே வரமென ஞானசித்தி
   வருமுலகில் தானாகக் கைகூடும்
   தருமபலத்தின் வழிகள் தன்னை
   தவராஜன் அன்னதானமெனும் சேவை
5. சேவை துவக்கி அருளிவர
   செப்பிடுவேன் கலியுக மக்களே
   அவைதனில் தொண்டோ பொருளுதவியோ
   அல்லது அரங்கமகான் புகழை பரப்பியோ
6. அய்யமற உயர் தொண்டுபுரிய
   ஆசான் அரங்கன் ஆசிபலம்
   மெய்ஞான சித்தி மேலவர் துணைபட
   முதன்மை நிலை கண்டு சிறப்பர்
7. சிறப்புதரும் ஞான சூட்சும குருவே
   சித்தி அருளும் தெய்வ வடிவே
   அறத்தின் அதிபலமே அரங்கனே
   அகிலத்தார் உன் நாம செபம் செய்தால் போதும்
8. போதுமப்பா தன் பிறவிப்பயனை
   பிசகின்றி அடைந்து தெளிவர்
   ஆதரவாய் ஞானிகளை வணங்கும்
   ஆற்றல் அற்புதம் கூடி இனிதே
9. இனிதே சகல மாற்றமுடன்
   எல்லாத் தேற்றமும் காண்பர்
   கனிவேலவன் தனை காட்சியாக
   காண விரும்பும் உலகமக்கள்

10. மக்களெல்லாம் ஏழாம்படை வீட்டு
மகான் அரங்கன் திருவடிபற்றி
தேக்கமில்லா அரங்கன் சேவைக்குள்
தொண்டாற்றி தொடர்ந்து வர

11. வருகவே உண்மை சீடர்களென
வல்லமை பெற்ற மக்களுக்கு
முருகப்பெருமான் காட்சி உறுதி
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—